முருகப்பெருமான் துணை

**மகான் பிங்களமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.03.2024**, புதன்கிழமை

1. பாவவினைகள் தனை அழித்திட
பரோபகார ஞான விதையிட்டு
அவதாரம் ஆறுமுகனார் அம்சமாக
அவதரித்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
வரங்களென சோபகிருது சேல்திங்கள்
வல்லமைபட சப்தமதிகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 07 ம் நாள், 20.03.2024, புதன்கிழமை)
3. வாரமதில் பிங்கள முனிவருமே
வையகம் மேன்மைபட உரைப்பேன்
சோரமான உலகியல் இன்பமான
சுயலாபம் பதவிஆஸ்தி புகழென
4. புகழென மண்பொன் மங்கையென
பித்தனாய் போதையில் உழன்றுமே
வகையான பிறவிநோக்கம் மறந்து
வருவதும் போவதுமான பிறப்பினை
5. பிறப்பினை தொடருகின்ற மானிடா
பித்தநிலை தெளிந்து ஞானவழி
பிறப்பறுக்கும் மார்க்கம் என்பதை
பூவுலகில் உணர்ந்து தெளிய
6. தெளியவே அஞ்ஞான வழிகடந்து
தெய்வ நெறிமுறைக்கு வர
அழியாமை பெற்ற ஞானிகள் நாமம்
அவசியம் அனுதினமும் முனகிப்பார்
7. முனகிப்பார் அப்பனே உன்பாவம்
முழுமையிலா செயல் வடிவெல்லாம்
தானாக விளங்கித் தெளிவும்
தப்பிக்க பிறவிப்பிணி அகற்ற

8. அகற்ற தக்கவழி கிட்டுமப்பா
ஆசாபாசம் வழி செய்கின்ற
பகட்டான பதவிசுகம் சுயநல
பண்பில்லா செயல்களும் விளங்கி

9. விளங்கி நல்வினை தீவினைஎனும்
வினவிட பகுத்தாய்வு கண்டு
களங்கமகற்றி வெல்ல நேரும்
கலியினில் கருமவினை அகற்ற

10. அகற்ற வந்த அரங்கமகானை
அணுகிட அனுகூலம் பெருகி
மகத்துவம்பட ஆன்மாவுக்கான
மாசற்ற வழிபாடும் மாதருமமும்

11. மாதருமமுமே இரு கண்களென
மாட்சிமை கிட்டி மக்களுக்கு
பூதலத்தில் இனிபிறவா பேறுகிட்டும்
புகன்றிவந்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—